

திருச்சியில் இன்று நடந்த வரதட்சணை ஒழிப்பு மாநாட்டில் அப்துல் ரகுமான் எம்.பி.பேசியபோது எடுத்தப்பட்டம். அருகில் ஜமால் முகமது கல்லூரி முதல்வர் சேக்முகமது உள்பட பலர் உள்ளனர்.

## வரதட்சணையை ஒழித்தால் தான்

# சமுதாயம் முன்னேற்றமடையும்!

## திருச்சி மாநாட்டில் அப்துல் ரகுமான் எம்.பி. பேச்சு!!

திருச்சி, ஜன. 27-

வரதட்சணையை ஒழித்தால் தான் சமுதாயம் முன்னேற்றமடையும் என்று அப்துல் ரகுமான் எம்.பி. கூறினார்.

மாநில அளவிலான மாபெரும் வரதட்சணை ஒழிப்பு மாநாடு திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் கைக்கூலி கைவிட்டோர் கழகம் சார்பில் இன்று நடந்தது. இஸ்மாயில் முகைதீன் வரவேற்றார். கல்லூரி ஆட்சி மன்றக்குழு துணை செயலாளர் காஜா நஜ்முதீன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் ஷேக்முகமது தலைமை தாங்கி பேசினார். கைக்கூலி கைவிட்டோர் கழக நிறுவனர் அப்துல்அ... லிம் அறிமுக உரையாற்றினார்.

மாநாட்டில் இதழை வெளியிட்டு அப்துல் ரகுமான் எம்.பி. சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

முன்னோர்கள் ஜாதி, மதத்தை ஒழிக்க பாடுபட்டார்கள். இப்போது வரதட்சணை தலை விரித்து ஆடுகிறது. வரதட்சணையை நாம் அனைவரும் ஒழிக்க வேண்டும். வரதட்சணையை ஒழித்தால் தான் இன்றைய சமுதாயம் முன்னேற்றமடையும்.

இவ்வாறு /அவர் பேசினார்.

சட்ட ஆலோசகர் சையது தாஜூதீன் மதானி வாழ்த்துரை வழங்கினார். மாநாட்டில் ஏராளமான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். முடிவில் பேராசிரியர் முகமது சர்புதீன் நன்றி கூறினார். மாநாட்டை தொடர்ந்து சிறப்பு பட்டி மன்றம் நடந்தது. மாலையில் நிறைவு விழா நடக்கிறது.